




பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50








சுடர் 5: பிரமோதூத ஆனி 21 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 11 (05 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 132


# யாழ். ஆஸ்பத்திரி மீண்டும் சனிக்கிழமை முதல் இயங்கும்

## நாளை இறுதி முடிவு எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். போதனா ஆஸ்பத்திரி மீண்டும் சனிக்கிழமை முதல் இயங்கத் தொடங்கும்.

நாளை கூடவிருக்கும் யாழ் ஆஸ்பத்திரிக் குழு இது சம்பந்தமான இறுதி முடிவை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியை உடனடியாகத் திறக்க வேண்டும் என்ற இணக்கநிலை ஆஸ்பத்திரி நிர்வாகிகள், வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள், மத்தியில் ஏற்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

நவீனவசதிகளைக்கொண்ட யாழ். ஆஸ்பத்திரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளருக்கான படுக்கை வசதிகளையும் கொண்டது.

இந்த ஆஸ்பத்திரி மூடப்பட்டதால் — குறிப்பாக இந்த யுத்த காலத்தில் மூடப்பட்டதால் — வடபகுதி மக்களுக்கு நோயாளருக்கு சிகிச்சையளிக்க முடியாமல் சஷ்டப்படும் சூழ்நிலை உருவாகியிருப்பது தெரிந்ததே. 1987 ஆம் ஆண்டு மே மாதம்

(4-ஆம் பக்சம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இந்தக் காலத்திலை உணவுப் பொருள்களை திருடுற வன்களை பிடிச்சு றோட்டிலை வைச்சுத் தோலுரிக்க வேணும் ...... இல்லாட்டால் திருந்தமாட்டான்கள் ...... பின்னை என்ன.......!

## பலாலிப் பகுதியில் நேற்று இரு மணித்தியால மோதல்

### ஷெல், பீரங்கி தாக்குதலும் நடந்தது

காங்கேசன்துறை, ஜூலை 5

பலாலி இராணுவ முகாமில் இருந்து வயாவிளான் வீதியூடாக நேற்று வெளியேற முற்பட்ட படையினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இரண்டு மணித்தியாலம் வரை நடைபெற்ற கடும் மோதலின் பின்னர் படையினர் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர்.

படையினர் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பலாலி முகாமில் இருந்து கட்டுவன், வயாவிளான் பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து ஷெல்கள் ஏவப்பட்டன.

அதேவேளை காங்கேசன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்ப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து அங்கிருந்து மக்கள் அவசர அவசரமாக கையில் அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறி வருகிறார்கள்.

நானாட்டான், அரிப்பு, சிலாபத்துறை முருங்கன், அடம்பன், முள்ளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இடம் பெயர்ந்துள்ளனர்.

பெரும்பான்மையானவர்கள் மடுவில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஒருபகுதியினர் வள்ளங்கள் மூலம் பேசாலைக்குப் போய் அங்கிருந்து தமிழ்நாட்டுக்குச் செல்கிறார்கள்.

நேற்றுக் காலையிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் வந்தனர். பலர் சைக்கிள்களிலும் வந்தனர். (இ-3)

## ஜீ.சி.ஈ பரீட்சை ஒத்திவைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ (உயர்தர) பரீட்சையை ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வி அலுவலக மற்றும் செயலக அதிகாரிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (இ-3)

## நேற்றுவரை 75,000 அகதிகள் யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வெளி மாவட்டங்களில் இருந்து நேற்று வரை 15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்தே கூடுதலானவர்கள் இங்கு வந்துள்ளனர்.

வழமையை விட நேற்று கூடுதலானவர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்

காலையில் இருந்து மாலை வரை கேரதீவு, முல்லைத்தீவு பஸ்கள் மூலம் மக்கள் வந்தவண்ணம் இருந்தனர்.

கொழும்பு செல்ல மடுவில் தங்கியிருந்தவர்களிலும் பெரும்பான்மையானவர்கள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பி விட்டனர். (இ-3)

## புகலிடம் இன்றித் தவிக்கும் அகதிகளுக்கு புதிய முகாம்

### திருநெல்வேலி முத்துதம்பி ம.வியில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

பிற மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து தங்க இடமின்றித் தவிக்கும் மக்களுக்கென புதிய அகதிமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலேயே இந்த முகாம் திறக்கப்பட்டுள்ளது.

உற்றார், உறவினர் இன்றி அல்லுறும் அகதிகளுக்கென "தேனீக்கள்" (கந்தர்மடம் யூனிவேர்சல்) சமூகசேவைப் பிரிவு விசேடமாக இந்த முகாமை அமைத்துப் பராமரித்து வருகிறது (ஒ)

## சண்டையை நிறுத்துவதற்கு இந்தியா முயற்சிக்க வேண்டும்

### இந்திய மார்க்ஸீய கம்யூ. அறிக்கை

புதுடில்லி, ஜூலை 5

இலங்கையில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சண்டையை உடனடியாக நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு, அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியாக முன் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கட்சி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் ஜனநாயகத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும். இப்பேச்சுக்களில் இலங்கை அரசும், சகல தமிழ் அமைப்புக்களும் கலந்து கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையில் குடிமக்கள் கொல்லப்படுவது கவலை தருகிறது.

இலங்கையில் இருந்து தப்பி அகதிகளாக வரும் தமிழர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாறைகளுக்குள் சிக்குண்ட கடற்படை படகு தகர்ப்பு!

வேலணை, ஜூலை 5

நயினாதீவு கடற் பகுதியில் பாறைகளுக்குள் சிக்கிக் கொண்ட கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிப் படகு குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

முக்கிய உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டபின்னரே படகு கடற்படையினரால் தகர்க்கப்பட்டது.

சுமார் 6 கோடிரூபா பெறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இடம்பெயர்ந்தோருக்கான 2ஆம் வார உணவுப்பொருள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள 43 ஆயிரத்து 558 குடும்பங்களுக்கும் நிவாரணமாக இரண்டாம் வாரத்துக்கான உணவுப் பொருள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான பணிப்புரையை அரச அதிபர், உதவி அரசாங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலி மில்லர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கரும்புலி கப்டன் மில்லரின் மூன்றாவது நினைவு நாள் இன்றாகும்.

1987 ஜூலை 5 ஆம் திகதி கப்டன் மில்லர் நெல்லியடியில் ஸ்ரீலங்கா முகாமைத் தகர்த்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வசந்தனே தியாகியான கப்டன் மில்லர் ஆவார். (ஒ)

## விவசாயிகளுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கூடியளவு விவசாய விதைகளை மேலதிகமாக வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

தற்போது எதிர்நோக்கும் உணவுப்பிரச்சினையைச் சமாளிக்கும்முகமாக சகல விவசாய நிலங்களையும் பயன்படுத்தும்படியும்—

அதிகமான விதைகளை வைத்திருப்போர் அவற்றை திருநெல்வேலி கிழக்கு 207, இராமலிங்கம் வீதியிலுள்ள தமது காரியாலயத்தில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உணவுப்பொருள் கொள்ளை

வட்டுக்கோட்டை, ஜூலை 5

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அராலி தெற்குக் கிழக்குக் (24 ஆம் இலக்கக்) கிளையில் வைக்கப்பட்டிருந்த அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை இரவு நடந்த இந்தக் கொள்ளையின் போது பால்மா பொருள்களும் அடங்கும் என அறிவிக்கப்படுகிறது. (அ-161)

## இந்திரா காங்கிரஸின் போக்கு மாறுகிறது!

லண்டன், ஜூலை 5

தமிழீழ விடுதலைப் புலிகளை வன்மையாகக் கண்டித்து வந்த இந்திரா காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதாக கட்சியும் தற்போது தமது போக்கை மாற்றிக் கொண்டிருப்பதாக பி.பி.ஸி நேற்றிரவு ஒலிபரப்பிய செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படுவது—

அதனால் மீண்டும் ஈழத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## செஞ்சிலுவைக் கொடியுடன் லொறிகளில் உணவுப் பொருள்

### வடக்கே அனுப்ப நடவடிக்கைகள்

கொழும்பு, ஜூலை 5

வடக்குப் பகுதிக்கு தொடர் வாகனங்களில் [கொன்வோய்] உணவுப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு மூலமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்தா ரத்வத்தை நேற்று அறிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன் இந்த லொறிகள் உணவுப் பொருள்களை

[4 ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

05 - 7 - 90

வியாழக்கிழமை ஆனி 21

சுபநேரம்!

07-27—08-57

இராகுகாலம்

01-27—02-57

## தமிழகத்தில் மீண்டும் குவியும் ஈழத்தமிழ் அகதிகள்

சென்னை, ஜூலை 5

வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஈழத்திலிருந்து வரும் தமிழ் அகதிகள் மீண்டும் தமிழகத்தில் குவியத் தொடங்கியிருக்கிறார்கள்.

கடந்த சிலநாட்களில் மட்டும் 4 ஆயிரத்து 117 பேர் அகதிகளாக வந்து சேர்ந்திருக்கின்றனர் என்றும்—

அகதிகளாக வந்த மேலும் சுமார் ஆயிரம் பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்காக மண்டபத்துக்கு அருகே இராமேஸ்வரத்தில் காத்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

200குடும்பங்களைச் சேர்ந்த 788 பேர் செவ்வாய்க் கிழமை இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்று சென்னையில் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது மண்டபம் அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளது.

யாழ் குடா நாட்டில் விமானத் தாக்குதல் அதிகரித்திருப்பதாலும் பட்டினி நிலைமை அங்கு நீடிப்பதாலும் அடுத்த சில தினங்களில் ஆயிரக்கணக்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்துக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்குக!

### இந்தியாவிடம் கோரிக்கை

லண்டன், ஜூலை 5

ஈழத் தமிழ்ப் பகுதிகளில் வான் வழியாகத் தாக்குதல்களை நடத்தும் ஸ்ரீலங்கா போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்த, விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு பீரங்கிகளை (ஏவுகணைகளை) இந்தியா கொடுத்து உதவ வேண்டும் என தமிழீழ விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ஈழவேந்தன் கேட்டிருக்கிறார்.

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் ஈழவேந்தன்-

இலங்கை பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்றால், இந்தியா ஏன் விடுதலைப் புலிகளுக்கு வான்வழி பாதுகாப்பு ஆயுதங்களைக் கொடுத்து உதவக் கூடாது என்று கேட்டார். [உ]

## கிளிநொச்சிக் குளத்திலிருந்து நீர்பாய்ச்ச இராணுவம் தடை

### சிறுபோக நெல் அழியும் ஆபத்து

கிளிநொச்சி நகரத்தில் உள்ள குளத்தில் இருந்து, சிறுபோக நெற்செய்கைக்கு தண்ணீர் கிடைக்காமல் போகும் அபாய நிலை தோன்றி உள்ளது.

கிளிநொச்சிக் குளத்தில் இருந்து தண்ணீர் பாய்ச்சத் திறந்துவிடுவதற்கான 'துரிசு' நகரில் உள்ள இராணுவ முகாம் பகுதியில் இருக்கிறது. அந்தத் துரிசைத் திறந்துவிட நீர்ப்பாசனப் பகுதி ஊழியர்கள் உள்ளே செல்ல இராணுவம் மறுத்துவிட்டது.

இதனால் கிளிநொச்சிக் குளத்தில் இருந்து தண்ணீர் பெறும் வயல்களுக்குச் சிறுபோகத்துக்கு தண்ணீர் கிடைக்காமல் நெற்செய்கை பாதிக்கப்படப்போகிறது.

ஏற்கனவே சிறுபோக நெற்செய்கைக்கு தண்ணீர் பற்றாக் குறை இருந்தது. அத்துடன் தற்போது இந்த புதுப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளதால் தமது பயிர் அழிந்து விடப் போகிறதே என்று விவசாயிகள் தலைமேல் கை வைக்கிறார்கள். [அ-76]

## அம்பாறையில் 155 மக்கள் படையினர் கையால் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 5

அம்பாறை மாவட்டத்தில் படையினரின் நடவடிக்கைகளினால் கடந்த சில நாட்களில் 155 தமிழ் பேசும் மக்கள் பலியாகியிருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் கடந்த 25 ஆம் திகதி 85 தமிழரும் கடந்த முதலாம் திகதி 57 தமிழரும் படையினரால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

துறைநீலாவணை, சவளக்கடை ஆகிய பகுதிகளிலும் கடந்த 26 ஆம் திகதி 6 பேரும் 30 ஆம் திகதி 6 பேருமாக 12 தமிழர்களை படையினர் கொலை செய்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி சொறிக்கல்முனையில் 3 தமிழ்

(4-ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துக்கடை இடமாற்ற

## அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலைகாரணமாக 69. கே. கே. எஸ். றோட்டில் இயங்கிவந்த ''ஆ. இராசையா அன் சன்ஸ் மருந்துக்கடை'' கீழ்க்காணும் முகவரிகளில் இயங்குகின்றன என்பதை அறியத் தருகிறோம்.

(1) 90 சட்டநாதகோவில் வீதி, நல்லூர்.

(2) 52 பலாலி றோட், திருநெல்வேலி (சந்தைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்.

**ஆ. இராசையா அன் சன்ஸ்**

(13567)

## நன்றி நவிலல்

திருமதி
திருஞானசம்பந்தர் யோகாம்பிகை

திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை [ஓய்வுபெற்ற ஆசிரியர் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அவர்கள் 01 - 07 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவரது ஈமக்கிரியைகள் 02-07-1990ல் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது இவரது ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

மீசாலை. [13570]

## றாஜு ஸ்ரேரர்ஸ் இடமாற்றம்

யாழ்ப்பாணம் 67. 69. கஸ்தூரியார் வீதியில் உள்ள றாஜு ஸ்ரோரின் ஒரு பகுதி வாடிக்கையாளரின் நலன் கருதி நல்லூர் கந்தசாமி கோவிலின் முன்பாக இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**றாஜு ஸ்ரேரர்ஸ்**
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்,

[13565]

# முல்லைத்தீவு அகதி முகாம்களிலே மலேரியா, வயிற்றோட்ட நோய்கள்

### சுகாதார வசதிகள் சீர்கேடு

யாழ்ப்பாணம், ஜூலை 5 முல்லைத்திவுப் பகுதியில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் மலேரியா, வயிற்றோட்டம், சிரங்கு போன்ற நோய்கள் பரவுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் இருந்து வரும் அகதிகளுக்கு முல்லைத்தீவின் பல வேறு பகுதிகளிலும் 21 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அங்கு சுகாதார வசதிகள் போதியளவு இல்லாத காரணத்தால் நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அகதிமுகாம்களிலுள்ள குழந்தைகளுக்கு வயிற்றோட்டம், நியூமோனியா, சொறி சிரங்கு, மலேரியா போன்ற நோய்களும் —

பெரியவர்களுக்கு ஷெல்லால் ஏற்பட்ட ஆறாதகாயங்களும், வயிறுளைவு, மலேரியா, போன்ற நோய்களும் — பீடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

# ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5 யாழ் பிரதான வீதியில் உள்ள மக்கள் வங்கி பிரதேச காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களை இன்று வியாழக்கிழமை யாழ் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி கிளையில் சமுகமளிக்குமாறு பிரதேச முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வங்கிகளின் அலுவல்கள் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக்கிளைக்கு மாற்றப்பட்டுள்ளன.

நவீன சந்தை மக்கள் வங்கிக் கிளையில் கடமையாற்றும் ஊழியர்களையும் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் இன்று வியாழக்கிழமை சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுன்னாகிட்டி மக்கள் வங்கிக்கிளையில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் அதேகிளையில் இன்று 5 ஆம் திகதி கடமைக்கு சமுகம் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-எ)

## "ஆசிரியருக்கு முழுச்சம்பளம் வழங்குக"

யாழ்ப்பாணம். ஜூலை 5 ஆசிரியர்களுக்கான ஜூன் மாதச் சம்பளத்தை முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

ஏனைய ஊழியர்களுக்கு ஜூன் மாதச் சம்பளம் முழுமையாக வழங்கப்பட்டுள்ள போது ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம் மட்டும் வழங்கப்பட்டிருப்பது குறித்து பிரஸ்தாப சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (இ

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 5 பிற இடங்களிலிருந்து வடமராட்சி பகுதிக்கு அகதிகளாக வந்து சேர்ந்தவர்களுக்கு உதவ பருத்தித்துறை புலோலி பகுதி பொதுமக்கள், மற்றும் சமூக தொண்டர் நிறுவனங்கள் உணவு, உடுபுடவைகளை வீடு வீடாகச் சென்று சேகரித்து வருகின்றனர்.

## இடமாற்றம்

### மெடி அனலைசர் எஜி

### வைத்தியர்களுக்கும் நோயாளர்களுக்கும்

மெடி அனலைசர் எஜி (மருத்துவ ஆய்வுகூட நிறுவனம்) சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக 30, பருத்தித்துறை வீதி, சாவகச்சேரிக்கு (தபாற் கந்தோர் முன்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### To all Doctors and Patients

Medi Analyzer AG (Medical Laboratory) is Temporarily Shifted to 30, Point Pedro Road, Chavakachcheri (Opposite Post Office) due to the Prevailing Situation.


(13568)

## அரிசி, மா, சீனி கையிருப்பு

புங்குடுதீவு ஜூலை 5 அரிசி, மா, சீனி ஆகியவற்றின் கையிருப்புப் பற்றிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை வேலணை உதவி அரசாங்க அதிபர் கோரி உள்ளார்.

(இ-131)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வடிவேலு ஸ்ரீமோகன்

(மோகன் பிறதர்ஸ் உரிமையாளர்)

அன்னையின் மடியில்: 16 - 09 - 1958

ஆண்டவன் அடியில்: 05 - 07 - 1984

பாசத்தின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய், எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் சென்றாலும் நீங்கள் எங்கள் இதயங்களில் என்றும் வாழ்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா, மாமா, அம்மம்மா, தம்பிமார், தங்கைமார்.


''அபிராமி இல்லம்''
210, முத்தமிழ் வீதி,
யாழ்ப்பாணம்.

(13562)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோழனே!

1987 மே 26
எமது மண்ணின் இருண்ட வாழ்வின்
புதிய அத்தியாயத்தின் தொடக்கமது
சட சட துப்பாக்கி வேட்டுகள்
வானதிரும் ஷெல் சத்தம்
தலைக்கு மேல் இரையும் பொம்மர்கள்
எங்கும் இன்னுயோர் குருசேத்திரம்
நாம் நடந்த வீதியும் மணல் ஒழுங்கையும்
எமது வயல் நிலமும் பனை மரங்களும்
அனைத்தும் அனைத்தும்
அடுத்தவனால் ஆக்கிரமிக்கப்பட்டன



1987 ஜூலை 05
எங்கள் இருண்ட வாழ்வில் ஒளியேற்ற
விடிவெள்ளியாய் தோன்றினாய்
இன்னல்கள் நிறைந்த எம்மவர் வாழ்வில்
இடர் நீக்க முதற் கரும்புலியாய்
வெடி மருந்துடன் காற்றில் கலந்தாய்
நாம் சுதந்திர வானில் பறப்பதற்காய்
உன் உயிர் சிறகையே ஒடித்துக் கொண்டாய்
காலைப் பரிதியாய் நீ ஒளிர்கிறாய்
காற்றும் மண்ணும் கடலும்
வானுமாய் நீ நிறைகின்றாய்
எம் நினைவுகள் உனக்காகவே
வாழ்ந்து கொண்டிருக்கும்

கரும்புலி **கப்டன் மில்லர்** (வசந்தன், துன்னாலை)

தாயின் மடியில்: 01 - 01 - 1966

தாயக மண்ணிற்காய்: 05 - 07 - 1987

நான் மரணத்தை மகிழ்ச்சியுடன் தழுவிக் கொள்கிறேன் அதனால்
மக்கள் விடுதலை அடைவார்கள் என்பதால் — மில்லர் —

துன்னாலை.

**- நண்பர்கள்**

[13564]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துணிந்து செல்வீர்!

வவுனியா நகரம் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டு விட்டது. இப்போது அங்கு படையினரைத் தவிர வேறு பொதுமக்கள், குறிப்பாகத் தமிழ் மக்களின் நடமாட்டமே இல்லை.

எந்த மாவட்டத்திலும் அதன் நகரமே தலையாயது. நகரத்தில் தான் மாவட்டம் முழுவதிலும் உள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பிரதான அரச இயந்திரம் இயங்குவது உண்டு. நகரம் ஸ்தம்பித்தால் அந்த மாவட்டம் முழுவதும் ஸ்தம்பிப்பது வழக்கம். வவுனியா அதற்கு விதிவிலக்கல்ல.

உணவுப் பொருள்கள், எரிபொருள் மற்றும் மருந்து வகைகள் என்பவற்றுக்கு வவுனியாவின் கிராமப் பகுதிகளில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. செட்டிகுளம், நெடுங்கேணிப்பகுதி மக்கள் பட்டினி நிலையில் உள்ளனர் என்ற தகவல் இதற்கு ஓர் உதாரணம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்வதற்கும், ஏனைய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வவுனியா நகரில் பிரதான அரச அலுவலகங்கள், ஆஸ்பத்திரி என்பன இயங்க வேண்டியது அவசியம்.

இந்த அலுவலகங்களில் பணிபுரிவோர் மிகப் பெரும்பாலானோர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதும் அவர்கள் அங்கிருந்து வந்துவிட்டார்கள்.

அதனால் வவுனியா நகரப்பகுதியில் உள்ள பிரதான அரச அலுவலகங்கள் சிறிய அளவிலேனும் இயங்க முடியாத நிலை உருவாகி உள்ளது. நகரில் இருந்து மக்கள் வெளியேறியதைத் தொடர்ந்தும், அரச அலுவலகங்கள் தொடர்ந்து இயங்காதிருப்பதைப் பயன்படுத்தியும் ஆயுதப் படையினர் நகரைத் தமது பிரதேசமாக்கி உள்ளனர். தமிழர்கள் உள்ளே செல்வதையும் தடுத்து வருகின்றனர்.

இந்த நிலையை நீடிக்க விட்டால், தமிழர்களுக்குப் பேரிழப்பு ஏற்படும் அபாயம் உண்டு. வவுனியா நகரம் சிங்களவர் வசமாகிவிடும். அப்படி ஒரு நிலையை அனுமதித்தால் நகரில் தமிழ் மக்கள் இருந்த இடங்களில் சிங்களவர்கள் குடியேறி விடுவர். முதலில் நகரத்தைப் பிடித்து பின்னர் மாவட்டம் முழுவதையும் கபளீகரம் செய்யத் திட்டமிடக்கூடும். இது ஒன்றும் அந்தப் பக்கத்தாருக்குப் புதியதல்ல. திருகோணமலை அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

ஏன், வவுனியா மாவட்டத்தின் தெற்குப் புறத்திலும் ஏனைய எல்லைப் பகுதிகளிலும் தமிழ்ப் பகுதிகள் அடுத்தவர் கைக்கு மாறிவருவது அனுபவம். நகரத்துக்கு நீண்ட காலம் தமிழர்கள் திரும்பவில்லை என்றால் அதுவும் ஏப்பம் விடப்படும் பேராபத்து உண்டு.

இதனை வவுனியாவில் பணிபுரிந்து யாழ்ப்பாணம் வந்திருக்கும் அனைத்து அரச ஊழியர்களும் உணர வேண்டும். மோதல் நிலைமை அங்கு சற்றுத் தணிந்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிவில் நிர்வாகத்தை மெதுமெதுவாக வேனும் அங்கு ஆரம்பிக்கவேண்டும். இடம்பெயர்ந்தோர் சிறிது சிறிதாகவேனும் நகருக்குச் செல்லும் விதத்தில், அகதி முகாம்களை ஏற்படுத்தி, நிவாரணப் பணிகளை ஆரம்பிக்கவேண்டும்.

இதுவிடயத்தில் அரச ஊழியர் சிறிது தியாகம் செய்ய முன்வரவேண்டும். தங்கள் நலன்கருதி யாழ்ப்பாணத்திற்குள்ளேயே முடங்கிவிட்டால், தமிழர்களின் கேந்திர நிலையங்களில் ஒன்றான வவுனியா நகரை இழக்க வேண்டிய சரித்திரப் பிடைக்குக் காரணிகளாவர்.

எனவே அரச ஊழியர் எல்லோரும் தமது மனதில் துணிவை வருவித்துக் கொண்டு, ஒற்றுமையுடன் எல்லோருமாக அங்கு சென்று பணிபுரிய முன்வர வேண்டும். இது ஒரு வரலாற்றுத் தேவையும், கடமையும் என்பதை உணர்ந்து செயலாற்ற முன்வருவது அவசியம்.

## ஊழியருக்கு சிறை வழங்க சட்டமூலம்

கொழும்பு, ஜூலை 5

அரச கரும மொழி ஆணைக்குழு முன் ஆஜராகத் தவறும் அரசு ஊழியர், அதிகாரிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்க வழி செய்யும் சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரச கரும மொழிச் சட்டத்தை மீறும் சம்பவங்கள் தொடர்பாக அரச கரும மொழி ஆணைக் குழுவின் முன் ஆஜராகவோ, சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கவோ தவறும் அரச அதிகாரிகளுக்கு மூன்றாண்டு சிறைத்தண்டனை விதிக்க இச் சட்ட மூலம் இடமளிக்கின்றது. (இ-எ)

# கப்பல் மூலம் உணவு அனுப்புமாறு விடுத்த கோரிக்கை நிராகரிப்பு!

## 4 தமிழ் மாவட்டங்களில் உணவு நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் ஆகிய தமிழ் மாவட்டங்களுக்கு கப்பல் மார்க்கமாக உணவுப் பொருள்களை அனுப்ப முடியாது என்று கொழும்பு அதிகாரிகள் தெரிவித்துவிட்டனராம்.

இந்த மாவட்டங்களில் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, எரிபொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அந்த அந்த மாவட்ட அரசஅதிபர்கள் அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்த ரத்வத்தைக்கு பல தடவை வானொலி மூலம் கோரிக்கை விடுத்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

காங்கேசன் துறைமுகத்துக்கு மாவுடன் வந்த கப்பல் திரும்பிய விடயத்தைச் சுட்டிக்காட்டி காங்கேசன்துறைக்கு கப்பல் அனுப்பினால் பொருள்கள் இறக்கமுடியாத நிலைதான் ஏற்படும் என்று அரசுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அதை விடுத்து வேறு துறைகளில் கப்பலைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு அதிகாரிகள் நிராகரித்து விட்டதாக நேற்று தகவல் கிடைத்தது.

காங்கேசன்துறைக்குத்தான் அனுப்பமுடியும் என்று கொழும்பு அதிகாரிகள் விடாப்பிடியாக இருந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்குமான உணவு விநியோகத்தை மேற்கொள்ள வசதியாக வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது.

வவுனியாவில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டால் ரயில் மூலம் வவுனியாவுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து மற்றப்பகுதிகளுக்கு விநியோகிக்க முடியும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. [இ 3]

## மடு தேவாலயப் பகுதியில் மேலும் 2,000 அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மடு தேவாலயத்தில் சுமார் இரண்டாயிரம் அகதிகள் தங்கி உள்ளனர் என அறிய வந்துள்ளது

திருக்கேதீஸ்வரம், மாந்தை மன்னார் பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்து மடுக் கோவிலில் தங்கியிருக்கின்றனர்.

ஏற்கனவே வவுனியாவில் இருந்து சென்ற அகதிகள் மடுத் தேவாலயத்தில் தங்கியிருந்தது தெரிந்ததே.

அகதிகளுக்கு தேவையான உணவு வசதிகளை மத குருமார்கள் கவனித்து வருகின்றனர். எனினும் அங்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது. (இ-10)

## பாடசாலை அதிபருக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 5

பாடசாலை அதிபர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது. இந்த அதிகரிப்பு 1. 1 1988 முதல் அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்று கல்வி துணை அமைச்சர் திருமதி ராஜ மனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

புதிய வருடாந்த சம்பளத் திட்டம் பின்வருமாறு;

முதலாம் தரம்: ரூபா 33 ஆயிரம் இரண்டாம் தரம்: ரூபா 31, 200/- மூன்றாம் தரம்: ரூபா 27, 000/-

இவை அடிப்படைச் சம்பளமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் வவுனியாவுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வவுனியாவில் இருந்து வெளியேறிய மக்களின் நிலைமை குறித்து ஆராய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் இரு அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு விஜயம் செய்தனர்.

அதிகாரிகளான பீற்றர் ஈக்குளோவ், ரிபெக்கா டியூமைலின் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

நகரப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களை அவர்கள் பார்வையிட்டனர். அகதிமுகாம்களில் உள்ளவர்களையும் நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தனர்.

நகரப் பகுதியில் இருந்து உணவுப் பொருள்களை கிராமப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல உதவிய இவர்கள், வவுனியாவுக்கு வந்து கொழும்பு திரும்ப முடியாது இருந்த கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்த 31 பேரைக் கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகளையும் செய்தனர். (இ-3)

## மட்டக்களப்பு தபால் நிலையம் கொள்ளை

கொழும்பு, ஜூலை 5

மட்டக்களப்புத் தபால் நிலையம் கொள்ளை அடிக்கப்பட்டதாகக் கொழும்புக்குக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

தபால் பொதிகள் கிழிக்கப்பட்டன. பணம் முற்றாகக் கொள்ளையிடப்பட்டதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-எ)

## "ஒக்ஸ்பாம்" நிவாரணஉதவி

பூநகரி, ஜூலை 5

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள அகதிகளுக்கு 'ஒக்ஸ் பாம்' நிறுவனம் உணவுப்பொருள்களை நிவாரணமாக வழங்கியது.

ஒரு வார காலத்துக்கான உதவிகள் மட்டுவில் கிழக்கு, மட்டுவில் மேற்கு, செட்டிகுறிச்சி, ஞானிமடம், பரமன் கிராய், கொல்லக்குறிச்சி, கௌதாரிமுனை ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன

பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக வழங்கப்பட்ட இந்நிவாரண உதவியை ஏனைய கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (இ-மு)

## மல்வத்தை மகாநாயக்கர் ரூ. 30 ஆயிரம்

கொழும்பு, ஜூலை 5

தேசிய பாதுகாப்பு நிதிக்கு மல்வத்தை மகாநாயக்க தேரர் 30 ஆயிரம் ரூபா அளித்திருக்கிறார்.

இதற்கான காசோலையை மகாநாயக்க தேரர், கண்டி கம்உதாவக் கண்காட்சியில் வைத்து ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கடந்த ஞாயிறு கையளித்தார். (இ-எ)

## புதிய பவுசர் மூலம் தண்ணீர்

புங்குடுதீவு ஜூலை 5

புங்குடுதீவுப் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான இந்த நிலையிலும் புதிய பவுசர் ஒன்று தண்ணீர் வழங்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (இ-131)

## தமிழ் நாட்டில் ஹர்த்தால் நடத்தக் கோரிக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கையில் நடக்கும் தாக்குதல்களை எதிர்த்துத் தமிழகத்தில் பெருமளவில் உண்ணாவிரதம், ஹர்த்தால், ஆகிய போராட்டங்களைத் தொடராக நடத்தவேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இலங்கைக் கிளைத்தலைவர் திரு. பொன். மதிமுகராசா அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி. ஜெயலலிதாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

ஈழத் தமிழர்கள் மீது ஸ்ரீலங்கா அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறை மற்றும் அழிப்பு நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்த இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் உந்துதல் கொடுக்கவேண்டும் என்றும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களை அழித்து வருவது குறித்தும் இராணுவ நடவடிக்கைகளால் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் கடிதத்தில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## கிளிநொச்சி முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல்கள்

### ஹெலியிலிருந்து துப்பாக்கிச்சூடு

கிளிநொச்சி ஜூலை 5

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து கடந்த திங்கள் இரவு முழுவதும் பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. முகாமை அண்டிய பகுதிகளில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதேவேளை வானில் விமானம் ஒன்றும் சிறிது நேரம் வட்டமிட்டு விட்டுச் சென்றது.

திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் 2 ஹெலிகளில் இருந்து குண்டுத்தாக்குதலும், துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டன.

இதில் ஒரு ஹெலி வானில் வட்டமிட மற்றைய ஹெலி முகாமில் இறங்க முற்பட்டது.

இவ்வேளை போராளிகளினால் ஹெலியை நோக்கி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனை அடுத்து இரண்டு ஹெலிகளும் அந்தப் பகுதி எங்கும் பலத்த தாக்குதலை மேற்கொண்டன.

அந்தப்பகுதிகளில் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டதனால் உயிரிழப்புக்களோ, காயங்களோ ஏற்படவில்லை. (இ-76)

## பாதிக்கப்பட்ட அரச ஊழியர் ஏமாற்றம்

பருத்தித்துறை, ஜூலை 05

பிறமாவட்டங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள் பலர் தற்போதைய நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட நிலையில் தம் சொந்த இடங்களுக்கு வந்துள்ளார்கள்.

இவர்களது சொந்த இடங்கள் இதுவரை பாதிக்கப்படாதிருந்தால் இவர்கள் அகதிகளாக கணிக்கப்படமாட்டார்கள்என்று சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் உடன் நிவாரணம் பெறமுடியாமல் மனக்கவலை அடைந்துள்ளனர். (இ-மு)

## அகதிகளுக்கு நிவாரணம் வழங்க முடியாத நிலை

கொழும்பு, ஜூலை. 5

மட்டக்களப்பு மாவட்ட அகதிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இதுவரை எட்டு லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள்மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவை 16 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்போதுமானவை ஆகும்.

மேலதிக உணவுப் பொருள்கள் வந்தால்தான் ஏனையவர்களுக்கும் நிவாரணம் வழங்க முடியும் என்று புனர்வாழ்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

## ஆனையிறவு முகாம் ஊடான போக்குவரத்துக்கள் தடை

ஆனையிறவு முகாம் ஊடான போக்குவரத்து கடந்த திங்களும், செவ்வாயும் தடைசெய்யப்பட்டிருந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல் ஒன்றை அடுத்தே முகாமின் முன்னால் உள்ள வீதி ஊடான போக்குவரத்தை இராணுவத்தினர் தடைசெய்திருந்தனர். (இ-76)

## இராணுவ முகாம் முன்னால் பொதுமக்கள் நடமாடத் தடை

கொழும்பு, ஜூலை 05

கல்முனைப் பகுதியில் இராணுவ முகாம்கள் முன்னால் மாலை 5 மணி முதல் காலை 5 மணி வரை பொதுமக்கள் நடமாடக்கூடாது என்று இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை மீறி நடந்தால் இதனால் ஏற்படும் விளைவுகளுக்குத்தாங்கள் பொறுப்பு அல்ல என்று கல்முனை இராணுவ முகாம் அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர்.

வடக்கு - கிழக்கு

# மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்த முடிவு

## ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 5

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கான திருத்தச் சட்ட மூலம் எதிர்வரும் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த செவ்வாய் மாலை கண்டியில் நடந்த 12 ஆவது கம்உதாவ கண் காட்சியின் நிறைவுநாள் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

எமது தாய்நாட்டைப் பாதுகாக்க எல்லோரும் ஒன்றுபட்டுள்ளனர்

பிழையான வழியில் செயற்பட்டு ஜனநாயக வழிகளைக் கைவிட்டு ஆயுதங்களை ஏந்திப்போராடும் கூட்டத்தினருக்குஎதிராக சமாதானத்தை விரும்பும் மக்கள் ஒன்று சேர்ந்து உள்ளனர்

நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்று குரல் எழுப்பியவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனைத் தீர்த்து வைக்கவே நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம்.

நியாய பூர்வமான, இதய சுத்தியான பேச்சுவார்த்தைகளை அவர்கள் புரிந்துசெயற்படவில்லை.

எமக்கு எதிராக, நாட்டின் வளர்ச்சிக்கு பங்கமாகவே அவர்கள் செயற்பட முனைந்தனர்.

நாட்டின் அமைதிக்கும் இறைமைக்கும் அவர்கள் பங்கம் விளைவிக்க மேற்கொண்ட முயற்சியே இன்றைய யுத்த நிலையாகும். அவர்கள் இதற்கு முன்னரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதை நாடு அறியும். அதனையும் நாம் பொறுமையுடன் அவதானித்தோம்.

அன்று ஜே. வி. பியினர் இமமாதிரியான செயல்களில் ஈடுபட்டபோது நாம் அவர்களை பேச்சு நடத்த அழைத்தோம். அரசியல் ரீதியில் அவர்களுக்குக் குறைபாடுகள் இருந்தால் அவற்றைப் பேசித் தீர்க்கலாம் என்றும் அவர்களுக்குச்சொன்னோம். அதற்கு செவிசாய்க்கவில்லை. அதன் முடிவு என்னவாயிற்று என்பதை மக்கள் நன்கறிவர்.

### பேச்சில் நம்பிக்கை

நான் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டவன். அதனையே இங்கும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குத் தங்கள் பிரதிநிதிகளை மீண்டும் தெரிவு செய்வதற்கு அப்பகுதி மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோரியது.

ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினால் உருவாக்கப்பட்ட நிலைமை காரணமாக, புதிய தேர்தலை நடத்துவதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இதற்காக மாகாணசபைச் சட்டம், மாகாண சபைத் தேர்தல் சட்டம் ஆகியவற்றைத் திருத்துவது என்று அமைச்சரவை கடந்த மாதம் 5 ஆம் திகதி முடிவு எடுத்தது. அடுத்த நாள் இந்தத் தீர்மானத்துக்கு போதுமான பிரபல்யம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் இத் திருத்தச் சட்ட மூலங்கள் அரசியல் யாப்புக்கு ஏற்புடையவை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அக்கட்டத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பொலீஸ் மற்றும் இராணுவ முகாம்கள் மீது திடீர்த் தாக்குதல்களை ஆரம்பித்தது.

வடக்கு - கிழக்கு மக்கள் சனநாயக முறையில் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு அனுமதிப்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இதய சுத்தியான அக்கறை கொண்டிருந்தால், அதற்கு ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் தங்கள் சனநாயக உரிமைகளை அச்சம் இன்றியும் பாரபட்சம் இன்றியும் நிறைவேற்ற வாய்ப்பளிப்பது அமைதியான சூழ் நிலையை உருவாக்க உதவும். அமைதிக்கான சூழ் நிலையை உருவாக்க வேண்டியது அவசிய தேவை ஆகும்.

அப்படியான சூழ் நிலையில் தான் எல்லாக் கட்சிகளும் சுதந்திரமாகப் பிரசாரம் செய்ய முடியும். அப்போது தான் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியும்.

ஆகவே, சனநாயக நடைமுறையில் இணைந்து கொள்வதற்கு இதய சுத்தியான அக்கறை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இருப்பின், குண்டுகளில் உள்ள விசுவாசத்தைக் கைவிட்டு வாக்குச் சீட்டில் நம்பிக்கை வைப்பது அவர்கள் கைகளில் இப்போது தங்கியிருக்கிறது.

### மாகாண சபை சட்ட திருத்தம்

மாகாண சபைச் சட்டத் திருத்த மசோதா ஜூலை 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்த அரசு தீர்மானித்து உள்ளது.

இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சொல்லப் போகும் பதிலை முழு உலகமுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது

ஜனநாயக நடைமுறையில் சேர்ந்து கொள்ள விரும்பும் எவருக்கும் கதவுகள் தற்போதும் திறந்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு அதிகமாக விட்டுக் கொடுத்து விட்டேன் என்று பலர் என்னிடம் குறைப்பட்டதும் உண்டு. நாட்டின் சமாதானத்தைக் கருத்திற் கொண்டு நான் அவ்வாறு செயற்பட்டேன்.

இன்று எம்மை எதிர்த்து யுத்தம் புரிபவர்கள் எமக்கு விரோதமாக நடந்தாலும் அவர்களுக்கு நேசக்கரத்தை நீட்டியது நாடறிந்த, உலகறிந்த உண்மை.

ஆனால், அவர்கள் எம்மீது யுத்தம் தொடுத்ததால் நாம் பேச்சுவார்த்தையை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். நாம் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு எதிராகப் [illegible] இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (இ-எ)

## மாகாணசபை கலைப்பு சட்ட வரைவு குறித்து மறுபரிசீலனை செய்க!

### ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5

மாகாணசபைகள் சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமான (மாகாண சபைக் கலைப்பு) சட்ட வரைபுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை மறுபரிசீலனை செய்யும்படி ஈ.பி ஆர் எல்.எவ் இயக்கம் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட எம் பியுமான திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த செவ்வாய் கொழும்பில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில்இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

திருத்தச்சட்ட வரைபுகளை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதை ஒத்திப்போட்டு, இச்சட்ட வரைபு பற்றிஆழ்ந்த முறையில் பரிசீலனை ஒன்றை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு பிரேமச்சந்திரன், கேட்டிருக்கிறார். (உ-எ)

## நாளை தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

புலோலி அருள்மிகு புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுதினம் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Spoken English

ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.

விபரங்கட்கு:

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

05 - 7 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping

கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும் ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.

விபரங்கட்கு:-

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.

## முள்ளிக்குளம் வரை படையினர் முன்னேற்றம் : மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

அநுராதபுரத்தில் இருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருக்கும் 5 ஆயிரம் துருப்புக்களும் முள்ளிக்குளம் வந்துவிட்டதாக நேற்றுக் காலை அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் கவரக வாகனங்களில் அநுராதபுரத்தில்இருந்து மன்னாரைநோக்கி வந்துகொண்டிருக்கின்றனர் என்று முன்பு தெரிவிக்கப்பட்டது.

காட்டுப்பாதைகளூடாக புல்டோசர் மூலம் புதிய பாதை அமைத்து முள்ளிக்குளம்வரை நேற்றுப் படையினர் வந்துசேர்ந்தனர்என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப்படையினர்இன்றோ அல்லது நாளையோ கஜுவத்தை ஆலங்குளம் பாதையூடாக நகருக்குள் பிரவேசிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (இ-3)

## மனைவி - பிள்ளைகளை தேடும் கணவன்மார்!

யாழ்ப்பாணம், ஜூலை 5

திருகோணமலையில் மனைவி பிள்ளைகளை விட்டு தப்பி வந்த கணவன்மார் தற்போது அவர்களை இங்குள்ள முகாம்களில் தேடி அலைகிறார்கள்.

முல்லைத்தீவு முகாம்களில் மனைவிமாரைத் தேடிப் பிடிக்க முடியாத கணவன்மார் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் தேடிவருகிறார்கள்.

இப்படி மனைவிமாரைத் தேடும் கணவன்மாரின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேல் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மனைவியைத் தேடும் ஓர் இளம்கணவன் விவாகம்செய்து மூன்று மாதங்கள் தான். இதற்குள் இந்த நிலை வந்துவிட்டதே'' என்று கவலை தெரிவித்தார்.

திருகோணமலைப் பகுதியில் ஆரம்பத்தில் ஆண்களே அதிகமாக வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். அதனாலேயே ஆண்கள் முதலில் பயத்தினால் வெளியேறி விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது (இ-3)

## அரசகருமமொழி ஆணைக்குழு சட்டமூலம்

கொழும்பு, ஜூலை 4

அரச கருமமொழி ஆணைக்குழு ஒன்றை உருவாக்கும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் ஆறு உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். இவர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

உத்தியோக மொழிகள் பாவனை குறித்து கொள்கைகளை சிபாரிசு செய்வது அரசியல் யாப்பின் நான்காவது ஷரத்தை அமுல் நடத்துவது பற்றி கண்காணிப்பது மேற்பார்வை செய்வது ஆகியன இந்த ஆணைக்குழுவின் முக்கிய பணியாக அமையும். (இ-எ)

## திருமலையில் அகதியானோர் மீது மீண்டும் தாக்குதல் எனத் தகவல்

### சூரன்கல்லில் 12 படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

திருகோணமலையில் அகதிகளானோர் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே அகதிகளாகி தம்பலகமத்தில் தஞ்சம் புகுந்திருந்த 400இற்கும் அதிகமான தமிழர்களைப் பிடித்து, மனித கேடயமாக்கிக் கொண்டு, சூரன்கல் என்னும் இடத்தை நோக்கிப் படையினர் முன்னேறினர். அவர்கள் தாம் பிடித்து வைத்திருக்கும் அகதிகளில் 28 இளம் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர்; அறுபதுக்கும் மேற்பட்டோரை சுட்டுக் கொன்றனர்.

சூரன்கல் பகுதியிலும் 3ஆயிரம் தமிழர்களை ஸ்ரீ லங்காப் படையினர் பிடித்து வைத்துள்ளனர்.

சூரன்கல் பகுதியை நோக்கி மற்றொரு வழியால் வந்த படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

நீண்ட நேரம் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 12 படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ரி - 56 - 2 ரக ரைபிள்கள் இரண்டை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

தம்பலகமம் பகுதியில்படையினர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் விமானத் தாக்குதல்களை அடுத்து திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அகதிகளாகிவந்து அங்கு தங்கியிருந்த பல ஆயிரக்கணக்கான தமிழ்பேசும்மக்கள் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகிலுள்ள காட்டுப் பகுதிகளுக்குச் சென்று, உணவோ தங்குமிடவசதியோ இன்றி அவதிப்படுகின்றனர்.

இம்மக்கள் படையினரின் தாக்குதல்களுக்குப் பயந்து அங்குமிங்குமாக இடம்பெயர்ந்து, மீண்டும், மீண்டும் தாக்குதல்களுக்கு உள்ளாகி சொல்லொணா துன்பத்தை அனுபவித்து வருகின்றனர் — என்று தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## ஈழத் தமிழரை பிணையில் விட கோரும் மனு நிராகரிப்பு

சென்னை, ஜூலை 5

சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் 108 பேரை பிணையில் விடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை சென்னை நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

இந்த 108 பேரில் பதின்மூன்று பேர் பெண்கள்.

சென்னை, சூளைமேடு பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கைதான சமயம் துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-எ]

## தமிழகத்தில் 22 புலிகளை காவலில் வைக்க உத்தரவு

சென்னை, ஜூலை 5

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 22 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் காவலில் வைக்கும் உத்தரவுகளை தமிழக அரசு கடந்த செவ்வாய்க்கிழமை பிறப்பித்தது.

சேலம், திருச்சிஆகிய இடங்களில் இருந்து தலா 7 பேரும் மதுரையில் இருந்து 6பேரும், தஞ்சாவூரில் இருந்து இருவருமாக- மொத்தம் 22 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று சென்னையில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈ. பி. ஆர். எல். எவ்வினர் 18 பேரும் தடுப்புக் காவலில்

சென்னை, ஜூலை 5

தேசியபாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐச் சேர்ந்த முக்கிய போராளிகள் பதினெட்டுப் பேரும் நேற்றுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

சென்னை, கோடம்பாக்கத்தில் சென்ற 19 ஆம் திகதி நடந்த ஈ பி ஆர் எல்.எவ். தலைவர்கள் கொலையுண்ட சம்பவத்தைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டிருந்த 181 இலங்கைத் தமிழரில் இந்த 40 பேரும் அடங்குவர். [ஒ-எ]

## 3 படையினர் மரணம்

கொழும்பு, ஜூலை 5

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் கிண்ணியா வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்தமோதல் ஒன்றில் மூன்று ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயமடைந்தனர்.

இப்படி கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில் நடந்த மோதல் ஒன்றில் ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டார்; ஐந்து சிப்பாய்கள் காயமடைந்தனர். (இ-எ)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்: இறுதி ஆட்டத்திற்கு ஆர்ஜென்ரீனா தகுதி!

மிலான், ஜூலை 5

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கலந்துகொள்ளும் தகுதியை தற்போதைய உலகக்கிண்ண சாம்பியன்களான ஆர்ஜென்ரீனா பெற்றுக்கொண்டது.

நேற்று முன்தினம் அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலி அணியை தோற்கடித்ததன் மூலம் இறுதி ஆட்டத்துக்கு ஆர்ஜென்ரீனா தெரிவாகியது.

நேப்பிள்ஸில் இந்த அரை இறுதி ஆட்டம் நடைபெற்றது.

ஆட்டத்தின் முடிவில் வழங்கப்பட்ட 90 நிமிடங்களில் இறுதி அணியினரும் தலா ஒரு கோல்களைப் போட்டதால் ஆட்டநேரம் மேலும் 30 நிமிடங்கள் நீடிக்கப்பட்டன. இந்த காலஎல்லையில் கோல் எண்ணிக்கையில் மாற்றம் இல்லாததால் பெனால்டி உதைகளின்மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

கால்இறுதியாட்டத்திலும் ஆர்ஜென்ரீனா அணி பெனால்டி உதை மூலமே வெற்றிபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றிரவு மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியும் மேற்கு ஜெர்மன் அணியும் மோதின.

இதில் வெற்றிபெறும் அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணியுடன் மோதும். (உ-எ)

## ஈழத்தமிழர்களுக்கு உணவு வழங்க இந்தியா ஏற்பாடு செய்ய வேண்டும்

### பாரதீய ஜனதாக் கட்சி கோரிக்கை

சென்னை, ஜூலை 5

இலங்கை, வடக்கு-கிழக்கு மாகாண தமிழருக்கு போதிய உணவு மற்றும் வைத்திய வசதிகளை உடனடியாக வழங்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாரதிய ஜனதாக் கட்சி இந்த வேண்டுகோளை நேற்று விடுத்தது.

இக்கட்சியின் செயலாளர் ஜே. பி. மாத்தூர் சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இத் தகவலை வெளியிட்டார்.

எனக்குக் கிடைத்த தகவலின்படி, வடக்கு - கிழக்குத் தமிழர்கள் போதிய மருத்துவ வசதிகளின்றியும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பற்றாக்குறையாலும் கஷ்டப்படுகின்றனர்.

ஆகவே தமிழர்களின் கஷ்டங்களை போக்க இந்திய மத்திய அரசு செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் சம்மதத்துடனோ மருத்துவவசதிகளையும் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

— இப்படி திரு. மாத்தூர் சொன்னார். (உ-எ)

## மக்கா மரணம்: 1,426 என்று அறிவிப்பு

ரியாத், ஜூலை 5

சவூதி அரேபியா மக்கா நகரில் சுரங்கப் பாதை ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 426 என்று சவூதி அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (உ-எ)

## தற்போதைய சூழ்நிலையில் ஐஸ்பழம், ஐஸ் போன்ற குளிர்பானங்கள் வேண்டாம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

பால்மா, சீனி போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஐஸ்பழம், ''ஜூஸ்'' போன்ற குளிர்பானங்களை உற்பத்தி செய்யவேண்டாம்.

இப்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் தீர்மானம்நிறைவேற்றி சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வோருக்கும் பொதுமக்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுக் காலை நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிறுவனத்தின் கூட்டத்தில் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும், செயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து அங்கு ஆராயப்பட்டது.

கடந்த இருவாரங்களாக அரச அதிபர் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளமையை பலரும் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்தனர்.

அரச அதிபர் மேற்கொள்ளும் நிவாரண வேலைகளுடன் இணைந்து அரசசார்பற்ற நிறுவனங்களும் நிவாரண வேலைகளை மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது. (ஒ-3)

## பயணிகள் நடுக்கடலில் விசாரணை

வேலணை, ஜூலை 5

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு சில தினங்களின் முன் நயினாதீவு இறங்குதுறையில் இருந்து கடற்படையினரால் தமது படகுடன் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டது.

படகில் இருந்த பயணிகளை நடுக்கடலில் வைத்து தனித்தனியாக விசாரிக்கப்பட்டனர். (இ-மு-167)

## இரத்த தானம் செய்யுமாறு பல்கலைஒன்றியம்வேண்டுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தானத்தில் சிறந்தது இரத்த தானம். அதற்கான ஒரு தருணம் இப்போது வந்திருக்கிறது.

இந்த இக்கட்டான நிலையில் உதவிட வாருங்கள் என அழைக்கிறது, யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.

பல்கலைக்கழக மாணவருக்கும், பொதுமக்களுக்கும் இந்த கோரிக்கையை விடுத்திருக்கிறது ஒன்றியம்.

இரத்த தானம் செய்ய விரும்புவோரை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு வருமாறும் ஒன்றியம் அழைப்பு விடுத்திருக்கிறது.

''ஓ'' குறூப் இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மரண அறிவித்தல்

**தாமோதரம்பிள்ளை நாச்சிப்பிள்ளை**

பாலாவோடை களபூமி காரைநகர் தாமோதரம்பிள்ளை நாச்சிப்பிள்ளை 04-07-1990 இல் காலமானார். இவர் காலம் சென்ற தாமோதரம்பிள்ளையின் மனைவியும், துரைராசா (முன்னாள் வீடமைப்பு திணைக்கள பிரதம கணக்காளர்), பொன்னம்மா, சரஸ்வதி, செலத்துரை (மனேச்சர், மொகமெட் அலி அப்துல்அலி, யாழ்), சிவப்பிரகாசம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகஸ்தர், வவுனியா), அன்னபாக்கியம் ஆகியோரின் தாயாரும், சதாசிவம், இராசமணி, தியாகராசா, சோமசுந்தரம் (பதிவாளர் காரைநகர்), சிவபாக்கியம் (ஆசிரியை வவுனியா மகளிர் மகா வித்தியாலயம், நம்பைக்குளம்), ஆகியோரின் அன்பு மாமியாரும், புஸ்பராசா, வைத்தியகாலநிதி சிவராசா, பொறியியலாளர் ஸ்கந்தராசா, கனகலிங்கம், (கிராமசேவையாளர், வவுனியா), பற்குணராசா' லக்குணராசா, தியாகலிங்கம் (இத்தாலி), தியாகேஸ்வரி, சுகந்தினி, கமலாதேவி (பாலாவோடை, த. க பாலாவோடை), யோகேஸ்வரி, புஸ்பநாயகம் (மாணவன் யாழ். இந்துக்கல்லூரி) செந்தூரன் (மாணவன், காரைநகர், இந்துக்கல்லூரி), ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் தில்லைமயானத்தில் நடைபெற்றது.

தகவல்:

தா, செல்லத்துரை

[13493]

## இடம்பெயர்ந்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர்களுக்கு வழங்கியுள்ளார்.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் முதலில் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இரண்டாம் வார உணவு புதிதாக மேலும் 13 ஆயிரத்து 558 குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. (இ-3)

## பலாலி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறை, மயிலிட்டிக் கடற்பகுதிகளில் இருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காங்கேசன்துறை முகாமில் இருந்து ஷெல் வீச்சும் இடம்பெற்றது.

நேற்று மாலை வரை ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. (ஒ-68)

## யாழ். ஆஸ்பத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கோட்டையைச் சூழவுள்ள பிரதேசம் யுத்த வலயமாகச் ஸ்ரீலங்கா அரசினால் பிரகடனப் படுத்தப்பட்ட போதும் அந்த எல்லைக்குள் இருந்த இந்த ஆஸ்பத்திரி மூடப்படவில்லை என்றும் —

ஆனால் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து முதல் தடவையாக இந்த ஆஸ்பத்திரி தற்காலிகமாக மூடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். ஆஸ்பத்திரி மூடப்பட்டதை அடுத்து அந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய மருத்துவர்களும், ஊழியர்களும் தற்காலிகமாக மானிப்பாயில்ஆஸ்பத்திரியை இயங்கச் செய்தனர்.

ஆனால் அங்கு ஆஸ்பத்திரியை பூரணமாக இயங்கச் செய்வதற்கான போதிய வசதிகள் இல்லாததால் நோயா[illegible] அனுபவித்து வருகின்றனர்.

## சண்டையை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி இந்திய மத்திய அரசு மனிதாபிமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாறைகளுக்குள்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதியான இந்த நவீன பீரங்கிப்படகை மீட்டு எடுத்துச் செல்ல கடந்த பல நாட்களாக கடற்படையினர் பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

இறுதியாக நயினை தில்லைவெளி பிடாரி அம்மனுக்குப் பூசைகள் செய்தும்கூட கடற்படையினருக்கு வெற்றிகிட்டவில்லை. அம்பாள் அவர்களுக்குக் கருணை காட்டவில்லை!

அதைத்தொடர்ந்து படகு தகர்க்கப்பட்டது.

தகர்க்கப்பட்ட படகின் சிதைவுகளை அப்பகுதிமக்கள் இப்போது சேகரித்துவருகின்றனர்.

இதேவேளை இப்படகு பாறைகளில் சிக்குண்டிருந்த வேளையில், அதில் வாள், கத்தி போன்ற பலவகையான ஆயுதங்களும் இருந்ததாகச் சொல்லப்பட்டது. [ஒ-167]

## அம்பாறை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் படையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். அப்பகுதியில் 15 வீடுகளையும் படையினர் எரித்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி வாகனேரியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த முகைதீன் பாவா அகமது லெப்பை என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அருகில் இருந்த அகமது லெப்பை [illegible] என்பவர் காயத்துக்குள்ளானார்.- என்று தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## செஞ்சிலுவைச்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்துக்கு எடுத்துச் செல்லும் என்று திரு. ரத்வத்தை மேலும் தெரிவித்தார். [அ-எ]

[மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

## தமிழகத்தில்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இதேவேளை--

மேலும் சுமார் 30 ஆயிரம் ஈழத்தமிழர்கள் தமிழகத்துக்குச் செல்வதற்காக தலைமன்னாரில் காத்திருப்பதாகவும்--

இவர்கள் ஒவ்வொருவரும் தமிழகத்துக்குச் செல்ல படகுக் கட்டணமாக 500 ரூபா வரை செலுத்தத் தயாராக இருந்தும் படகுகளில் இடம் கிடைக்காமல் தவிப்பதாகவும்--

மன்னாரிலும் டீசல் தட்டுப்பாடு நிலவுவதால் தமிழகத்துக்கு அகதிகளை ஏற்றிச் செல்வதற்கான படகுச் சேவை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## விவசாயிகளுக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும்-

தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாயிகளையும், சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுள்ளது. [ஒ]

## இந்திரா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழர் அகதிகளாக தமிழகத்தில் குவியத் தொடங்கியிருப்பது—

ஆகியவற்றை அடுத்தே இந்தக் கட்சிகள் தமது போக்கை மாற்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகநடக்கும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவும் — போர்நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசைத்தூண்டவும் இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் தவறிவிட்டன என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org